முனைவர் தி. நெடுஞ்செழியன், எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(இதழியல்),எம்.பில்.,பி.எச்.டி.,
ஆசிரியர், தமிழ்த் திணை மின்-இதழ்.
தமிழ் விரிவுரையாளர் முதுநிலை.
அ.வ.அ. கல்லூரி, மன்னம்பந்தல் - 609 305.
மயிலாடுதுறை.

நாள் : 20.07.2004

அன்புள்ள ஆனந்த விகடன் ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். 25.07.2004 நாளிட்ட ஆனந்த விகடன் இதழில் ஹாய் மதன் பகுதியில், வாசகர் ஒருவர், எத்தனையோ பறவைகள் இருக்கும்போது மயிலை மட்டும் தேசியப் பறவையாக அறிவித்தது ஏன்? கேட்ட கேள்விக்கு மதன் அவர்கள், மயிலின் தோகை பெரிய போஸ்டர் மாதிரி இருப்பதால் அரசியல்வாதிகளுக்குப் பிடித்திருக்கலாம் என்று விடையளித்திருந்தார்.

நான் பல ஆண்டு காலமாக ஆ.வி.யின் வாசகராக இருந்து வருகிறேன். ஹாய் மதன் பதில்களை இரசித்தும் வியந்தும் பலவேளைகளில் படித்து மகிழ்ந்திருக்கிறேன். மாணவர்களிடம் பாடம் நடத்துகின்ற வேளைகளில் மதனின் சுவையாகச் செய்தி சொல்லும் பணியை இதழியல் வகுப்புகளில் பல நேரங்களில் குறிப்பிட்டிருக்கிறேன்.

ஆனால் மயில் தேசியப் பறவையானது எப்படி என்பதற்கு மதன் அளித்துள்ள விடை அதிர்ச்சியாகவும் நேர்மையற்றதாகவும் இருந்தது. வாசகனின் பொறுப்பான கேள்விக்கு முறையாக விடையளிக்காமல், கேள்வி கேட்டவரையும், இதழ் வாசிக்கும் வாசகர்களையும் மிகலேசாக எடைபோட்டு பொறுப்பில்லாமல் விடை தந்துள்ளமை வேதனையை ஏற்படுத்தியது.

முதலில் அரசியல்வாதிகளுக்குப் பிடித்திருந்திருக்கலாம் என்பது ஏற்க முடியாத ஒன்றாகும். ஏனெனில் தேசியப் பறவை, விலங்கு, சின்னம், கொடி இவற்றையொல்லாம் பிடித்திருந்தால் வைத்துக் கொள்ளமுடியாது. மயில் தேசியப் பறவையாக அறிவிப்பதற்கு முன்னால் அதற்கானக் குழுவினர் கூடி எந்த பறவை தேசியப் பறவையாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதற்காக பல பறவைகள் குறித்து அலசி ஆராய்ந்திருப்பார்கள். அப்போது தேசியப் பறவையாகத் தேர்வு செய்திடப் பரிந்துரைக்கப்பட்ட பல பறவைகளின் சிறப்பு, தனித்தன்மை, பெருமை இவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். பின்னர் அறிவிக்கப்பட்டால் யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவண்ணம் மிக கவனமாகத் தேர்வு செய்யப்படும். தேசியப் பறவை என்பது மிகப்பெரிய மரியாதைக்குரியதாக அமைந்திருக்கவேண்டும் என்பது தேர்வுக் குழுவின் மைய இழையாக இருந்திடும் என்பது உண்மையாகும்.

இந்நிலையில் மயில் இந்தியாவின் தேசியப் பறவையாகத் தேர்வு செய்ய அதன் பெருமை, சிறப்பு, தனித்தன்மை என்னவெனில், மயில் தமிழகம் மற்றும் தமிழகத்தை ஒட்டியுள்ள பகுதி களிலும் இந்தியாவின் பல பகுதிகளிலும் ஆசியப் பகுதிகளில் சில இடங்களில் மட்டுமே வாழும் பறவையாகும். உலகின் எந்த பகுதியிலும் மயில் இருந்திருக்கவில்லை. மிகப் பெரிய எண்ணிகையில் தமிழகத்தில் மட்டுமே மயில்கள் உள்ளன. (கலைக்களஞ்சியம், தொகுதி - 8, பக்.104-106)

ஆண் மயிலின் அழகிய தோகையும், தோகைகளில் உள்ள கண் போன்ற அமைப்பும் அதன் வண்ணமும், நீண்ட கழுத்தைக் கொண்ட அதன் தோற்றமும் மயிலுக்கு எழில்ஊட்டு-வனவாகும். மயில் இந்தியப் பறவை என்பது அதற்குப் பெருமையும் ஆகும்.

உலகின் தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் உள்ள இலக்கண, இலக்கிய நூல்களில் அதிகம் இடம் பெற்ற பறவை என்ற பெருமை மயிலுக்கு உண்டு. கி.மு.5ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கூறப்படும் உலகின் முதல் இலக்கண நூல் தமிழில் உள்ள தொல்காப்பியமாகும். தொல்காப்பியத்தில், மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளில், குறிஞ்சி நிலத் தலைவன் முருகவேள் என்றும் குறிஞ்சி நிலத்திற்-குரியப் பறவை மயில் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.(தொல்.அகத்திணையியல்.20)

தொல்காப்பியம் மரபியலில் 589, 593, 601 ஆகிய நூற்பாக்களில் மயிலின் இளமை பெயர், ஆண்மயில், பெண் மயில் எவ்வாறு அழைக்கப்பட வேண்டும் என்று இலக்கணம் உள்ளது. சங்க இலக்கியங்களான ஐங்குறுநூறு, கலித்தொகை, சிறுபாணாற்றுப்படை, நற்றிணை, நெடுநல்வாடை, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, மதுரைக்காஞ்சி இவற்றில் பாடல்-களில் மயில் இடம் பெற்றுள்ளது.(தாமஸ் லேமேன், தாமஸ் மால்டன் - சங்க இலக்கியப் பொருள் அடைவு, சென்னை ஆசிய நிறுவன வெளியீடு)

திருக்குறளில், எடை குறைந்த மயில் தோகை அளவுக்கு அதிகமாக ஏற்றப்பட்டால் அச்சு முறிந்து விடும் என்ற குறிப்பு உள்ளது. கடையேழு வள்ளல்களில் பேகன், மயிலுக்குப் போர்வை போர்த்தினான் என்பதால் அவன் இன்றும் போற்றப்பட்டு கொண்டிருக்கிறான். கம்பராமயணத்தில் காட்சிப் பலடத்தின் 4 ஆவது பாடலில் அசோக வனத்தில் சீதையைக் காணும் அனுமன், மயிலின் சாயலையும் குயிலின் மழலையும் கொண்டிருந்த சீதையைக் கண்டதாகக் கம்பன் குறிப்பிடுகின்றார்.

தமிழ் கடவுள் என்று போற்றப்படுகின்ற முருகப் பெருமானின் வாகனம் மயில் என்பது அதற்குத் தெய்வப் பெருமையும் உண்டு. குன்றின் மீதுள்ள முருகனை மயில் வழிபட்டதால் கடலூர் மாவட்டத்தில் உள்ள ஓர் ஊர் மயிலம் என்று அழைக்கப்பட்டு வருகிறது. சென்னை-யில் உள்ள மயிலாப்பூர் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் மயில்கள் ஆரவாரிக்கும் இடமாகத் திகழ்ந்தமை கலைக்களஞ்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மயில்கள் நிறைந்து தோகை விரித்து ஆடிய இடம் என்பதால்தான் மயிலாடுதுறை என்ற பெயரும் ஏற்பட்டதாக தல வரலாற்றில் உள்ளது.

இந்திய நாடளுமன்றத்தின் மேலவை உறுப்பினராக பேரறிஞர் அண்ணா பணியாற்றிய காலத்தில் நிகழ்ந்த விவாதமொன்றில், அதிக மக்கள் பேசும் இந்தியை நீங்கள் ஆட்சி மொழியாக ஏற்க ஏன் மறுக்கின்றீர்கள் என்று அண்ணாவிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு அண்ணா, இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் வாழும் பறவைகளில் காக்கைக்குத்தான் முதலிடம். அப்படியிருக்க தேசியப் பறவையாகக் காக்கையைத் தேர்வு செய்யாமல் மயிலை ஏன் தேர்வு செய்தார்கள் என்றால் அதன் பெருமை, சிறப்பு மற்றும் தனித்தன்மைகளாகும் என்று பதில் அளித்தார்.

இப்படி பன்னெடுங்காலப் பெருமை கொண்ட பறவை மயில் என்பது யாரலும் மறுக்க முடியாத உண்மையாகும். அதன் அடிப்படையில்தான் மயில் தேசியப் பறவையாகத் தேர்வு செய்யபட்டதேயொழிய அரசியல்வாதியின் ஆசையினால் அல்ல என்பதை நாம் உணர-வேண்டும்.

மயில் குறித்து இவ்வளவு சிறப்பான செய்திகள் இருக்க மதன் ஏன் மழுப்பலான விடை தந்தார் என்பதை விளக்கிட வேண்டும். மயிலின் பெருமையை விளக்கினால் தமிழின் பெருமையும் சேர்ந்துவிடுமே என்று அஞ்சி விட்டாரோ. தமிழ் நிலத்துக்குச் சொந்த-முடையது மயில் என்ற வகையில் தமிழர்களுக்குப் பெருமை வந்துவிடக்கூடாது என்பதில் மதன் அக்கறையுடன் இருக்கின்றாரோ என்னும் ஐயம் எழுகின்றது. விளக்கம் அளிக்க வேண்டியது மதனின் பொறுப்பாகும்.

தங்கள் உண்மையுள்ள,

தி.நெடுஞ்செழியன்

e-mail : neduyazhini@sancharnet.in